NSW கல்வித் துறை

## Behaviour code for students

Information for students and parents or carers

# மாணவர்களுக்கான நடத்தை குறியீடு

மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்களுக்கான தகவல்

NSW அரசுப் பள்ளிக்கூடங்கள் பாதுகாப்பான, ஆதரவான மற்றும் பொறுப்புமிக்க கற்றல் சூழல்களை பல்வேறு வகைகளில் அனைவருக்கும் வழங்க உறுதிப் பூண்டுள்ளன. எங்கள் மாணவர்களிடம் நாங்கள் மதிக்கும் உள்ளடக்கிய மற்றும் பாதுகாப்பான நடத்தைகளை நாங்கள் கற்பித்து, மாதிரியாகக் காட்டுகிறோம்.

### NSW அரசுப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களிடம் தங்களின் திறனுக்கு ஏற்றவாறு பின்வருபவை எதிர்பார்க்கப்படுகிறது:

- மற்ற மாணவர்கள், அவர்களின் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஊழியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கு மரியாதை காட்டுதல்
- பள்ளிக்கூடம் மற்றும் வகுப்பு விதிகளைப் பின்பற்றுதல் மற்றும் அவர்களின் ஆசிரியர்களின் வழி காட்டுதல்களைப் பின்பற்றுதல்
- கற்றலில் உயர்ந்த தரத்திற்கு பாடுபடுதல்
- பள்ளிக்கூட சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் மதிப்புமிக்கவர்களாகவும், உள்ளடக்கப்பட்டவர்களாகவும், ஆதரவளிக்கப்பட்டவர்களாகவும் உணரவைக்கும் வகையில், மரியாதையான மற்றும் மரியாதைக்குரிய விதத்தில் செயல்படுதல்
- முரண்பாட்டை மரியாதையாகவும், அமைதியாகவும், நியாயமாகவும் தீர்வு காணுதல்
- பள்ளிக்கூடம் ஏற்றுக்கொண்ட சீருடைக் கொள்கை அல்லது ஆடைக் குறியீட்டை நிறைவுசெய்தல்
- ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்திற்கு சமூகமளித்தல் (சட்டப்பூர்வமாக விலக்களிக்கப்பட்டால் அன்றி)
- அனைத்து சொத்துகளையும் மதித்தல்
- பாதுகாப்பாக இருத்தல் மற்றும் வன்முறையில் ஈடுபடாமல் இருத்தல் அல்லது ஆயுதங்கள், சட்டவிரோத போதைப்பொருட்கள், மதுபானங்கள், மின்-சிகரெட்டுகள் அல்லது புகையிலைகளை எங்கள் பள்ளிக்கூடங்களுக்குள் கொண்டு வராமல் இருத்தல்
- எங்கள் பள்ளிக்கூடங்களில் யாரையும் கொடுமைப்படுத்தவோ, துன்புறுத்தவோ, மிரட்டவோ அல்லது பாகுபாடு காட்டவோ கூடாது.

தனக்கு அல்லது பிறருக்கு தீங்கு விளைவிக்கும் நடத்தைக்கு பதிலளிக்கும் வகையில் அல்லது உயர்தர கற்பித்தல் மற்றும் கற்றலை அடைவதற்கு பள்ளிக்கூடங்கள் நடவடிக்கை எடுக்கும் .

### அனைத்து மாணவர்களுக்கும் பின்வரும் உரிமைகள் உண்டு:

- பள்ளிக்கூடத்தில் பாதுகாப்பு
- அவர்களின் கற்றலை அணுகவும் மற்றும் முழுமையாக பங்கேற்கவும்
- மற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக்கூட ஊழியர்களால் மரியாதையுடன் நடத்தப்படுதல்
- தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தவும் , இலக்குகளை நிர்ணயித்து சுயமாக வாதிடவும்.

அதிபர் மற்றும் பள்ளிக்கூட ஊழியர்கள், அவர்களின் தொழில்முறை மதிப்பீட்டைப் பயன்படுத்தி, ஒழுக்கத்தைப் பேணுவதற்கும், பாதுகாப்பான, ஆதரவான மற்றும் பொறுப்புமிக்க கற்றல் சூழல்களை வழங்குவதற்கும் மாணவர்கள் இந்த எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாதபோது பொருத்தமான செயலைப் பயன்படுத்துவதற்கும் சிறந்த முறையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கொள்கைக் கட்டமைப்பை வழங்குதல், சட்ட விவகார அறிவிப்பு வெளியீடுகள், நிபுணர்களின் ஆலோசனைக்கான அணுகல் மற்றும் தொழில்சார் கற்றல் போன்றவற்றை வழங்குதல், அதிபர்கள் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கு அவர்களின் தொழில்முறை மதிப்பீட்டை பயன்படுத்துவதற்கு வழிகாட்டுவது துறையின் பொறுப்பாகும்.

இந்த சூழலில், NSW அரசாங்கமும் கல்வித் திணைக்களமும் உள்ளூர் மட்டத்தில் அதிபர்கள் மற்றும் பள்ளிக்கூட ஊழியர்களின் அதிகாரம் மற்றும் மதிப்பீட்டை ஆதரிக்கும்.

### மாணவர்களுக்கான நடத்தைக் குறியீடு: மாணவர் நடவடிக்கைகள்

NSW அரசுப் பள்ளிக்கூடங்களில் அனைத்து மாணவர்களையும் சேர்ப்பது, கற்பிப்பது, நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை ஊக்குவிப்பது கல்வித் துறையின் உயர் முன்னுரிமையாகும்.

மரியாதையான, பாதுகாப்பான மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய நடத்தைக்கான எங்கள் உயர் தரங்களைப் பூர்த்தி செய்வதற்கு மாணவர்களுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் பல்வேறு வகைகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் அணுகுமுறைகளை நாங்கள் செயல்படுத்துகிறோம்.

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய, NSW அரசுப் பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தங்களால் இயன்றவரை, பின்வரும் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.**

### மரியாதை

- ஒருவரையொருவர் கண்ணியத்துடன் நடத்துங்கள்.
- கண்ணியமாக தொடர்பாடல் கொள்ளவும் மற்றும் நடந்து கொள்ளவும்.
- மற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக்கூட ஊழியர்களுடன் இணைந்து செயல்படவும், பணியாற்றவும்
- நேர்மறை மற்றும் மரியாதைக்குரிய உறவுகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- மற்றவர்களின் விருப்பங்கள், திறன் மற்றும் கலாச்சாரத்திற்கு மதிப்பு கொடுக்கவும்.
- மற்ற மாணவர்களின் கற்றல் தேவைகளை மதிக்கவும்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட பள்ளிக்கூட சீருடை அல்லது ஆடைக் குறியீட்டை பின்பற்றி சரியான முறையில் ஆடை அணியுங்கள்.
- பள்ளிக்கூடச் சொத்துக்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் பிற மாணவர்களின் சொத்துக்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

### பாதுகாப்பு

- பள்ளிக்கூடம் மற்றும் வகுப்பு விதிகள் மற்றும் நடத்தை மற்றும் ஒழுக்கம் பற்றிய எதிர்பார்ப்புகளை பின்பற்றவும்.
- முரண்பாட்டை பேசித் தீர்க்கவும்.
- அவர்களின் நடத்தை மற்றும் செயல்கள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பற்றி அறிந்திருக்கவும் மற்றும் பொறுப்பேற்கவும்.
- தன் மீது மற்றும் மற்றவர்கள் மீதும் அக்கறை செலுத்துதல்
- பாதுகாப்பாக இருங்கள் மற்றும் தங்களை அல்லது மற்றவர்களை காயப்படுத்தாத பாதுகாப்பான தேர்வுகளை செய்ய மற்றவர்களுக்கு உதவுங்கள்.

### கடப்பாடு

- சரியான நேரத்தில் பள்ளிக்கூடம் மற்றும் வகுப்பிற்கு சமூகமளித்தல்.
- ஒவ்வொரு பாடத்திற்கும் தயாராக இருங்கள்.
- கற்றலில் தீவிரமாக பங்கேற்கவும்.
- கற்றலின் உயர்ந்த தரத்தை அடைய ஆசைப்படுங்கள் மற்றும் முயற்சி செய்யுங்கள்

### தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

மேலும் விவரங்கள் வேண்டுமானால் பள்ளிக்கூட தலைமையாசிரியரை அழைக்கவும். உங்கள் விசாரணையில் உங்களுக்கு ஒரு உரைப்பெயர்ப்பாளர் தேவைப்பட்டால், தயவு செய்து 131 450 என்ற தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையை அழைத்து உங்கள் மொழிப் பேசும் உரைப்பெயர்ப்பாளரைக் கேட்கவும்.

நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்ணை ஆபரேட்டரிடம் சொல்லுங்கள், உரையாடலில் உங்களுக்கு உதவ, ஆபரேட்டர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை ஒழுங்குசெய்வார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்படாது